## திராவிட இயக்க இதழ்கள் - ‘தாரகை’




திராவிட இயக்கத் தலைவர்களில் ஒருவரான ஏ.கே.வில்லவம் நடத்திய இதழ்களில் ஒன்று ‘தாரகை’. 1957-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் இந்த இதழ் தனது பயணத்தைத் தொடங்கியது. இது மாத இதழாக வெளிவந்தது.

முகப்பு அட்டைப் படத்தைத் திறந்தவுடன், முதல் பக்கத்தில் அந்த இதழில் யார் என்ன படைப்புகளை வழங்கி உள்ளனர், என்பது குறித்த தகவல் இடம்பெற்றுள்ளது.

கவிதை, சிறுகதை, மொழிபெயர்ப்புச் சிறுகதை, கட்டுரை, நாடகம், பொது அறிவுத் துணுக்குகள், கேலிச் சித்திரங்கள், நகைச்சுவைத் துணுக்குகள் எனப் பல்சுவை இதழாக இது வெளியிடப்பட்டது.

“தாரகையை - திராவிட இனத்தின் ‘விடி வெள்ளி’ எனலாம். விடி வெள்ளிகள் மேல் நாடுகளில் தோன்றி, அந்த மக்களை முன்னேற்றிய செய்திகளை வரலாற்று ஏடுகளில் கண்டுள்ளோம். இங்கே, அண்மையில்தான் - விடி வெள்ளிகள் முளைக்கின்றன. விடி வெள்ளியாக விளங்கும் ‘தாரகை’யை நமக்களிக்கும் நண்பர்கள்- ஏ. கே.வில்லவம், அருண்மொழி பி.ஓ.எல். அவர்களை நாடு நன்கறியும். அவர்களது அரிய முயற்சியாலும், ஆர்வத்தாலும் மின்னும் ‘தாரகை’ நமது உள்ளத்திற்கும் சிந்தனைக்கும் விருந்தாகத் திகழும் என்பது உறுதி.

‘தாரகை’யின் துணைகொண்டு நடந்து, ‘உதயசூரியனை’ நாம் காண இருக்கின்றோம். உதயசூரியனை விரைவில் காண்போம் என்ற உறுதியோடு ‘தாரகைக்கு’ வரவேற்பு கூறுகிறேன். வாழ்த்துரை வழங்குகிறேன்” என்று முதல் இதழில் வாழ்த்துரை வழங்கியுள்ளார், இனமானப் பேராசிரியர்.

## :.ப்ளாஷ்பேக்





திராவிட கதிரவன்

### தஞ்சையில் தளபதிக்கு வரவேற்பு!

2004-ஆம் ஆண்டு நான் ஒன்றிய இளைஞர் அணித் துணை அமைப்பாளராக இருந்தபோது அன்றைய இளைஞர் அணிச் செயலாளர் இன்றைய கழகத் தலைவர் அவர்கள், தஞ்சை மாவட்டத்திற்கு பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு வருகை தந்தார். அப்போது அவரை வரவேற்று சால்வை அணிவித்து, சிறப்பு செய்த மகிழ்ச்சியான தருணம். அருகில், அன்றைய மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் இன்றைய தஞ்சாவூர் சட்டமன்ற உறுப்பினர் டி.கே.ஜி.நீலமேகம், ஒன்றியத் துணைச் செயலாளர் மு.காந்தி ஆகியோர் உடன் இருந்தனர்.

**- திராவிட கதிரவன்,**
**தலைமைப் பொதுக்குழு உறுப்பினர்,**
**தஞ்சாவூர் மத்திய.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்


### எதிர்ப்புகளை மீறி பொதுக்கூட்டம்!

1987-ஆம் ஆண்டு ஏப்ரல் 20-ஆம் தேதி. வெள்ளக்கோவிலில் கலைஞர் கலந்துகொள்ளும் பொதுக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்தக் கூட்டம் நடைபெறக்கூடாது என, மேடைக்கு தீ வைக்கப்பட்டு, கழகக் கொடிக் கம்பங்களை எல்லாம் அன்றைய ஆளுங்கட்சியினர் வெட்டி எறிந்தனர். எதிர்ப்புகளையும் மீறி, கூட்டத்துக்கு புறப்பட்ட கலைஞரை காவல்துறை கைது செய்தது. இதனால், தமிழ்நாடு முழுவதும் பதற்றம் ஏற்பட்டதையடுத்து, இரவு 11.30 மணிக்கு கலைஞர் விடுதலை செய்யப்பட்டார். ஆனால், கலைஞர் கலந்து கொள்ளவில்லை என்றாலும், அந்தக் கூட்டத்தைக் கழகத்தினர் நடத்தி முடித்தனர்.

## மாநாடு

ர.பிரகாசு **30**

திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...



# கிளர்ந்தெழுந்த பெரியார்!



இராஜாஜி ஆட்சிக் காலத்தில் பெரியாரால் ஓட ஓட விரட்டப்பட்ட இந்தித் திணிப்பு முயற்சி, மீண்டும் 1948-இல் எட்டிப்பார்த்தது. “தமிழ்நாட்டில் இந்தி விருப்பப் பாடமாகவும், கேரள - ஆந்திர- கர்நாடகப் பிரதேசங்களில் கட்டாயப் பாடமாகவும் இருக்கும்” என்று 20.06.1948 அன்று அரசாணை வெளியானது.

பெரியார் இராமசாமிக்கு, ஓமந்தூர் இராம சாமி பயப்படலாமா? கட்டாயப் பாடமாக அல்லவா இந்தி இருக்க வேண்டுமென்று சில பார்ப்பன ஏடுகள் சிண்டு முடிந்தன. ஆனால், அது சட்ட அளவில்தான் விருப்பப் பாடம், நடைமுறை அளவில், கட்டாயப் பாடமாகத்தான் இருந்தது. சென்னை மாகாண முதல்வர் ஓமந்தூர் இராமசாமியும், கல்வி அமைச்சர் அவினாசிலிங்கம் செட்டியாரும் பெரியாருக்கு மிக நெருக்கமானவர்கள். வலது கையே இடது கை அடிப்பதாக இருக்கிறது இன்றைய நிலைமை எனக் கவலைகொண்ட பெரியார், இரண்டாவது இந்தி எதிர்ப்புப் போரைத் தொடங்கினார்.

முதல் இந்தி எதிர்ப்புப் போரில் பெரியாரோடு கரம் கோர்த்து களம் கண்ட மறைமலை அடிகளார், இம்முறையும் தோளோடு தோள் நின்றார். 17.07.1948 அன்று சென்னை, அரண்மனைக்காரத் தெரு, செயிண்ட் மேரி மண்டபத்தில், “சென்னை மாகாண இந்தி எதிர்ப்பாளர் மாநாடு” மறைமலை அடிகளார் தலைமையில் நடைபெற்றது. முதல் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் ஒதுங்கி நின்ற திரு.வி.க. ம.பொ.சி., நாரண துரைக்கண்ணன், டி. செங்கல்வராயன் போன்றோரும் இம்முறை பெரியாருடன் இணைந்து, மாநாட்டில் பங்கேற்றனர். செயிண்ட் மேரி மண்டபம் மட்டுமின்றி, அந்தத் தெருவே அதற்கு முன்பு கண்டிராத வகையில் 25 ஆயிரத்துக்கும் மேற்பட்டோரால் நிரம்பி இருந்தது.

**“பள்ளிக்குச் செல்லுங்கள், ஆனால், இந்தி படிக்காதீர்கள்” என மாணவர்களிடம் வேண்டுகோள் விடுத்தனர். நூறு நாட்கள் வரை மறியல் நீடித்தது.**

‘தமிழ்த்தென்றல்’ திரு.வி.க. மாநாட்டைத் திறந்துவைக்க, எழுத்தாளர் நாரண துரைக்கண்ணன் வரவேற்புரையாற்றினார். “மொழி சம்பந்தமாக இரண்டாவது முறையாகப் போர் தொடுக்க, இங்கு கூடியுள்ளோம்” என்று அறைகூவல் விடுத்தார் நாரண துரைக்கண்ணன். “உடலினும் உயிரினும் அதிகம் போற்றிப் பாது காக்கப்பட வேண்டியது தாய்மொழி” என்று திரு.வி.க. ஆற்றிய உரை, கூட்டத்தினரை உசுப்பியது.

“தமிழில் பண்பட்ட தமிழன் நாக்கு, இந்தியை ஏற்கவே ஏற்காது” என்று பேசினார் ம.பொ.சி. “இந்தி தமிழைக் கெடுக்கும் என்று அறிந்திருந்தும் அதை தமிழ்நாட்டில் நுழைய அனுமதித்தது ஏன்?” என்று மாகாண ஆட்சியாளர்களை நோக்கி, ஆவேசக் குரல் எழுப்பினார், தந்தை பெரியார்.

“இந்தியைத் தமிழ்நாட்டில் எந்த வகையில் புகுத்துவதையும், கட்டாயப் பாடமாக்குவதையும் தமிழர்கள் விரும்பவில்லை, கடைசி வரை இந்தியை எதிர்த்துப் போராடுவோம்” என்று எச்சரிக்கை விடுத்தது, இம்மாநாடு. இந்தி எதிர்ப்பு அறப் போராட்டத்திற்கு வடிவம் கொடுக்க 13 பேர் கொண்ட குழு அமைக்கப் பட்டது. 15-9-1948 முதல் நாடு முழுவதும் 300-க்கும் மேற்பட்ட ஊர்களில் பள்ளிகளுக்கு முன்பு மறியல் நடைபெற்றன. மறியலின் முதல் படைத் தலைவராக, சர்வாதிகாரியாக அண்ணா நியமிக்கப்பட்டார். “பள்ளிக்குச் செல்லுங்கள், ஆனால், இந்தி படிக்காதீர்கள்” என மாணவர்களிடம் வேண்டுகோள் விடுத்தனர். நூறு நாட்கள் வரை மறியல் நீடித்தது.

18.07.1957-இல் கட்டாய இந்தித் திணிப்பில் இருந்து பின்வாங்கியது, மாகாண அரசு.

**...கூட்டம் திரளும்**

## பாசறை படிப்பறை

கௌதம் ராஜ் **30**

“புத்தகத்தில் உலகைப் படிப்போம், உலகத்தையே புத்தகமாய்ப் படிப்போம்” என்றார் முத்தமிழறிஞர் கலைஞர். அப்படி சுயமரியாதை-சமத்துவம்-சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...

# தேர்தலும் மக்கள் தீர்ப்பும்...




2024-மக்களவைத் தேர்தல் முடிவுகள், பா.ஜ.க.விற்கு வெற்றிகரமான தோல்வியையும், இந்தியா கூட்டணிக்கு தோல்விகரமான வெற்றியையும் பெற்றுத் தந்துள்ளது. ஆட்சி அமைக்கப் பெரும்பான்மை பலமில்லாத பா.ஜ.க., தனது கூட்டணிக் கட்சிகளின் உதவியுடன் ஆட்சி நடத்தி வருகிறது. சர்வாதி காரத்தின் பிடியிலிருந்து இந்திய மக்களாட்சி ஓரளவுக்கு மீட்கப்பட்டி ருப்பதையே, 2024-தேர்தல் முடிவுகள் உணர்த்துகின்றன.

2024-தேர்தல் முடிவுகளி லிருந்து நாம் பெற வேண்டிய படிப்பினைகளையும், இந்தத் தேர்தலை இந்தியச் சமூகம் எப்படி எதிர்கொண்டது என்பது குறித்தும், எதிர்காலத்தில் நாம் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும், மேலும் இத்தேர்தலை ஒட்டி நடந்த பல்வேறு நிகழ்வுகள் குறித்த கட்டுரைகளையும் கொண்டு செம்மையான ஒரு தொகுப்பாக வெளியாகி இருக்கிறது ஆழி பதிப்பகத்தின் ‘தேர்தல் 2024: மீளும் ‘மக்கள்’ ஆட்சி’ என்ற நூல். சு.அருண் பிரசாத் இந்நூலைத் தொகுத்துள்ளார். கழக இளைஞர் அணிச் செயலாளர் மாண்புமிகு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 19/09/2024 அன்று இந்நூலை வெளியிட்டு உரையாற்றினார்.

**இந்திய மக்களாட்சியின் கடந்தகாலம்-நிகழ்காலம்-எதிர்காலம் என்று மூன்று காலத்தையும் கருத்தில் கொண்டு உருவாக்கப்பட்டிருக்கும் இத்தொகுப்பு தமிழில் புதுமுயற்சி.**

தமிழ்நாட்டில் நாம் பெற்ற **‘நாற்பதுக்கு நாற்பது’** என்ற வரலாற்று வெற்றியின் காரண காரியத்தை **‘தென் திசையின் தீர்ப்பு’** என்ற தலைப்பில் நூலாக்கி, சமீபத்தில் வெளி யிட்டிருந்தார் நம் கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள், அதன் நீட்சியாக மாண்புமிகு முதலமைச்சர் எழுதிய **‘இந்தியாவுக்கு வழிகாட்டிய தமிழ்நாடு’** என்ற சிறப்புக் கட்டுரையுடன் தொடங்குகிறது இந்நூல். ப.சிதம்பரம், து. ரவிக்குமார் போன்ற அரசியல் கட்சிப் பிரதிநிதிகள் முதல் வரலாற்றாசிரியர்கள், சமூகச் செயல்பாட்டாளர்கள், ஊடகர்கள், ஆய்வாளர்கள், பொருளாதார அறிஞர்கள், சூழலியல் செயற்பாட்டா ளர்கள், பேராசிரியர்கள் உள்ளிட்ட பலர் தங்களது கருத்துகளைக் கட்டுரைகளாக வடித்துள்ளனர்.

2024- மக்களவைத் தேர்த லில் பா.ஜ.க அடைந்த சித்தாந்த ரீதியிலான தோல்வி யும், இந்தியா கூட்டணி பெற்ற கொள்கை ரீதியிலான வெற்றியும் பெரும்பாலான கட்டுரைகளின் மையாகப் பேசப்பட்டுள்ளது. கூட்டாட்சி, பொருளாதாரம், நீதித்துறை, ஊடகத் துறை ஆகிய துறைகளின் மெதுவான மீட்சிக்கு பா.ஜ.க.வின் சித்தாந்த தோல்வி வழிவகுக்கும் என்று, இதில் பங்களித்துள்ள பல்வேறு கட்டுரையாளர்கள் கருதுகிறார்கள்.

அரசியலமைப்புச் சட்டப் பாதுகாப்பு, சிறுபான்மையினர் நலன், ஊடகச் சுதந்திரம் ஆகியவற்றில் எதிர்க்கட்சிகளும், சிவில் சமூகமும் மேற்கொள்ள வேண்டிய செயல்பாடுகள் குறித்து, சில கட்டுரைகள் கவனப்படுத்துகின்றன. கால நிலை மாற்றம், 2K கிட்ஸின் உளவியலும் அரசியலும், கருத்துக் கணிப்புகளின் அரசியல், நான்காம் தலைமுறை திராவிடம் என்று பல புதிய பார்வைகள் அடங்கிய கட்டுரைகள் இந்நூலை அலங்கரிக்கின்றன.


2024-தேர்தல் முடிவின் முக்கியத்துவத்தை உணர்ந்துகொள்ள, பன்முகப் பார்வைகள் கொண்ட இந்தத் தொகுப்பு அவசியம் பயன் படும். இந்திய மக்களாட்சியின் கடந்தகாலம்-நிகழ்காலம்-எதிர்காலம் என்று மூன்று காலத்தையும் கருத்தில் கொண்டு உருவாக்கப்பட்டி ருக்கும் இத்தொகுப்பு தமிழில் புதுமுயற்சி.

**...வாசிப்போம்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம்

**610**

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131